மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இத் திட்டம் சமீபத்தில்தான் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது இன்னும் பரிசீலனையில் தான் இருக்கிறது. பரிசீலனை முடிந்து அரசுக்கு வந்த பிறகு, நிதி நிலையைப் பொறுத்து ஆராய்ந்து அரசு ஒப்புதல் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, தொப்பையாறுத் திட்டம் பற்றி வருஷம் பூராவும் இம்மாதிரி கேள்வி கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். அரசாங்கம் சீக்கிரம் நடவடிக்கை எடுக்கவில்லை. போக்குவரத்துக்கு இணைப்புப்பாதை அமைக்க வேண்டியது மிக மிக அவசியம். ஆகவே, அதை விரைவாக எடுத்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அந்த அவசியத்தை உணர்ந்துதான் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளச் சொல்லி, விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. மேற்கொண்டு டீடெய்ல்டு இன்வெஸ்டிகேஷன் முடிந்த பிறகு அரசு அதைப்பற்றி பரிசீலித்து ஒரு முடிவு எடுக்கும்.

லெட்சுமிபுரத்தில் புதிய கண்மாய்

*420 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம் ஆண்டி பட்டி தொகுதியைச் சேர்ந்த லெட்சுமி புரத்திற்கு கண்மாய் அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இத் திட்டத்தின் மதிப்பு ரூ. 10 லட்சம். லெட்சுமிபுரம் அருகிலுள்ள 288 ஏக்கர் நிலங்களுக்கு புதிதாக பாசன வசதி அளிக்கும். 202 டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு வழி வகுக்கும்.

திரு. கே.டி.கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இலட்சுமிபுரம் கண்மாய் போன்ற கண்மாய்கள் அமைப்பதன் மூலமாக பக்கத்தில் தண்ணீர் ஊற்று வர வசதியாக இருக்கும். பல்லவ அரசர்கள் காலத்தில் இப்படிப்பட்ட கண்மாய்களை அதிகமாக அமைத்தார்கள். அவற்றில் தூர்ந்து போயிருக்கக்கூடிய கண்மாய்கள் மதுரை மாவட்டத்தில் பல இருக்கின்றன. அவற்றை எல்லாம் மராமத்து செய்து புதுப்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது உண்மை. அதுபோல் ஏராளமான கண்மாய்கள் தூர்ந்து போய் இருப்பனவற்றைச் சீர்படுத்தினுல் பக்கத்திலிருக்கும் கிணறுகளுக்கு ஊற்று நீர் வர வாய்ப்பு இருக்கும். நிலங்கள் பாசன வசதி பெற வாய்ப்பு இருக்கும். ஆனுல், நிதி நிலைக்கு ஏற்ப ஒவ்வொன்றுக எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.காம்., பி.காம்., பட்டப்படிப்புகள்

*416 வினு—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மாலை நேரக் கல்லூரியில் எம்.காம்., பட்டப்படிப்பு துவக்குமாறு அப் பல்கலைக்கழகத்திற்கு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, எம்.காம்., போன்ற மேல் பட்டப் படிப்பு மிகவும் இன்றியமையாது இருக்கிற காரணத்தால் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள கல்லூரிகளிலும், மதுரைப் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள கல்லூரிகளிலும் விஸ்தரிக்கச் செய்ய அரசு வேண்டிய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பி.காம்., பட்டப் படிப்பு பல்வேறு கல்லூரிகளிலும் துவக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வருகின்றன. பி.காம். பட்டப் படிப்புக்குத் தேவையான ஆசிரியர்கள் எண்ணிக்கை இப்போது இருக்கிற அளவுக்கு இருக்கிறது. மேற்கொண்டு விரிவுபடுத்தினுல் அதற்கு எம்.காம். படித்தவர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தின்கீழ் 9 கல்லூரிகளிலும், மதுரைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இரண்டு கல்லூரிகளிலும் எம்.காம். வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அவற்றிலிருந்து உருவாகிறவர்களைப் பயன்படுத்தும் அளவுக்கு விரிவு படுத்த வேண்டுமென்று கூறுகிறுர்கள். என்றுலும், அரசு பல்கலைக் கழகத்தினிடத்தில் எம்.காம். வகுப்புக்கு அதிக முக்கியத்துவம் தரலாம் என்று கூறியிருக்கிறது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, இந்த மாலை நேரக் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள் அந்தந்தக் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள்தாஞ ? அப்படியானுல், அவர்களுக்கு என்று தனியாக வழங்கப்படுகிற சலுகைகள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.